TNRM010019442024



மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிமன்றம், இராமநாதபுரம்.

**முன்னிலை: திரு.**ஏ.கே.மெஹ்பூப்அலிகான், B.L.M., L.L.M.,PG.D.PM/IR,
Dip.in.J.J & J.Psy., PG.D.D.F.,
விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை மாவட்ட நீதிபதி, இராமநாதபுரம்.

**2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ம் நாள் திங்கள்கிழமை**

**மோ.வா.வி.கோ.தீ மனு எண். 82 of 2024**

**CNR.TNRM01-001944-2024**

***

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் தாலுகா, அழகன்குளம், க.எண்.2/146, அம்மன்கோவில் குடியிருப்பு என்ற முகவரியில் வசித்து வரும் நம்புராஜன் அவர்கள் மகள், இந்து, சுமார் 24 வயதுள்ள சிவரஞ்சனி.

.. மனுதாரர்

/எதிர்/

1. அடைக்கலம், த/பெ.காடன், 9 புதுத்தெரு, திருக்கோ கர்ணம், புதுக்கோட்டை 622 002.

2. ஜெனரல் மேனேஜர், HDFC, ERGO ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட், 519, என்.எச்.85, காமராஜ்சாலை, மதுரை 625 009.

3. சாலியா, க/பெ. அல்லாபிச்சை, 1/157, அலங்கானூர், முதுகுளத்தூர் 623 712, இராமநாதபுரம் மாவட்டம்.

4. அஜிஸ்ஜெண்ட் லீகல் மேனேஜ், சோழமண்டலம் இன்சூரன்ஸ் கம்பெனி லிட், 3 4 திண்டுக்கல் ஹைவேஸ் ரோடு, ஸ்ரீ End ஹாஸ்பிடல், காளவாசல், மதுரை 16.

.. எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்னர் 06.03.2026 தேதியன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.தமிழ்வேந்தன்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:06:07 +0530

அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதரப்பாக கருதப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.தர்மராஜ், அவர்கள் முன்னிலையாகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.ராஜேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.பிரபாகரன் அவர்கள் முன்னிலையாகியும், இம்மனு சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், இந்நீதிமன்ற ஆய்விற்குட்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பகரும்...

## உத்தரவு

கடந்த 24.01.2024 அன்று ஏற்பட்ட சாலை விபத்தின் காரணமாக இறந்துபோன நம்புராஜன் என்பவரின் மகளான மனுதாரருக்கு நஷ்ட ஈடாக ரூ.30,00,000/-க்கு மனு தாக்கலான தேதியில் இருந்து 12 சதவீதம் பின்வட்டியுடன் வழங்கக்கோரி மோட்டார் வாகன விபத்து சட்டம் 1988 பிரிவுகள் 140, 141, 142, 163(பி), 166 மற்றும் 182(ஏ) உ/இ மோட்டார் வாகன விதி 3(1) திருத்தப்பட்ட சட்டம் 54/1994ன்படி இம்மனு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:

கடந்த 15.01.2024ம் தேதியன்று பாதையைாத்திரையாக பழனி முருகன் கோவிலுக்கு சென்றுவிட்டு 23.01.2024ம் தேதி TN 65 BZ 3188 என்ற எண் கொண்ட TATA ACE வாகனத்தில் இரவு சுமார் 8.30 மணிக்கு பழனியில் இருந்து புறப்பட்டு 24.01.2024ம் தேதி அதிகாலை சுமார் 2 மணியளவில் தேவகோட்டை தாண்டி வந்து கொண்டிருந்தபொழுது தச்சுவயல் நாடார் குடியிருப்பு செல்லும்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:06:15 +0530

சாலை அருகே வந்து கொண்டிருந்தபொழுது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி எதிரே 1ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான TN 45 CY 5983 என்ற எண் கொண்ட அசோக் லைலாண்ட் லாரி வாகனத்தை ஓட்டிவந்த அதன் ஓட்டுநர் பிரபு என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் சாலைவிதிகளை கடைபிடிக்காமலும், ஹாரன் அடிக்காமலும் மேற்படி வாகனத்தை ஓட்டி வந்து மனுதாரரின் தந்தை சென்ற வாகனத்தின் முன்பக்கம் மோதியதில் மனுதாரரின் தகப்பனாருக்கு தலையில் காயமும், வலது கால் முட்டிக்கு கீழ் பலத்த ரத்தக்காயமும், உடல்முழுவதும் சிராய்ப்பு காயங்களும் ஏற்பட்டதாகவும், மேலும் மேற்படி வாகனத்தில் சென்ற நபர்களுக்கு பலத்த காயமும் ஏற்பட்டதால் மேற்படி சம்பவத்தை பார்த்த அந்த வழியாக சென்ற நபர்கள் சுயநினைவற்ற நிலையில் இருந்த மனுதாரரின் தந்தையை ஆம்புலன்ஸ் மூலம் தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தபொழுது அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் காயங்களினால் மனுதாரரின் தந்தை நம்புராஜன் இறந்துவிட்டதாக தெரிவித்தனர். விபத்தானது 1 ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும், ஓட்டுநரின் கவனக்குறைவினாலும் ஏற்பட்டுள்ளது. 1ம் மனுதாரர் இறந்துபோனவரின் ஒரே மகள். விபத்து காலத்தில் இறந்துபோன நம்புராஜன் 59 வயதுடையவராக நல்ல திடகாத்திரமாகவும், முழு உடல் தகுதியுடனும் இருந்தார். மேலும், அவர் இறப்பதற்கு முன்பு கடல் தொழில் மற்றும் மீன் வியாபாரம் செய்து மாதம் ரூ.30,000/- வரை வருமானம் ஈட்டி வந்து, அதன் மூலம் குடும்பத்தை பராமரித்து வந்தார். அவரது திடீர் இறப்பினால் அவரது ஒரே மகள் அன்பு, பாசம் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை இழந்து எந்த ஒரு ஆதரவுமின்றியும் தவிக்கிறார். மேலும், இறந்துபோன நம்புராஜனின் மனைவியும், மனுதாரரின் தாயாரும் மேற்படி விபத்தில் இறந்துவிட்டார். 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் 2ம்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:06:18 +0530

எதிர்மனுதாரரின் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி விபத்திற்கு 1, 2 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ மனுதாரர்களுக்கு ரூ.30,00,000/- நஷ்ட ஈடு வழங்க கடமைப்பட்டவர்கள் என்றும், இறந்துபோன நபர் 3ம் எதிர்மனுதாரரின் வாகனத்தில் பயணம் செய்துள்ளதால் மேற்படி 3ம் எதிர்மனுதாரரை அவசிய கட்சிக்காரராக சேர்க்கப்பட்டுள்ளதாலும், மேற்படி வாகனம் 4ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் முறையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி மனுதாரருக்கு 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். இந்த விபத்து குறித்து தேவகோட்டை காவல் நிலைய குற்ற எண்.18/2024 பிரிவுகள் 279, 337, 304(ஏ) இதச பிரிவுகளின் கீழ் வழக்கு 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு மேற்படி வழக்கானது தேவகோட்டை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது.

3) <u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-</u>

**3.1.** மனு சட்டப்படியும் நியாயப்படியும் ஏற்புடையதல்ல. மனுவில் கண்டுள்ள சங்கதிகள் பொய்யானது. அவற்றை தகுந்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் கொண்டு மனுதாரர்கள் நிரூபிக்கவேண்டும். விபத்து ஏற்பட்டது குறித்து மனுவில் கூறியுள்ள விபரங்கள் தவறானது. 1ம் எதிர்மனுதாரர் வானம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் போலியாக காப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் 2ம் எதிர்மனுதாரர் தவறாக 23.01.2024 முதல் 22.01.2025 வரையிலான காலத்திற்கு தவறுதலாக பாலிசி எடுத்துள்ளதாகவும், அதில் லாரி எண். TN 45 CY 5983 என குறிப்பிட்டுள்ளது. ஆனால் வாகனத்தின் விபரத்தில் வாகனத்தின் தயாரிப்பு மாருதி என்றும் மாறுபட்டு Alto STD Car என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:06:23 +0530

மேலும் ரூ.2,693/- குறைவான தொகையை செலுத்தி காப்பீட்டு நிறுவனத்தை ஏமாற்றி அது 796 கிலோ எடைகொண்ட கனரக வாகனம் என்று தவறாக குறிப்பிட்டுள்ளார் என்றும் எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கோரியுள்ளார்.

**3.2.** மேலும், 1ம் பிரதிவாதி வாகனத்தின் தயாரிப்பு மற்றும் மாடலை அசோக் லேலேண்ட் என மாற்றி எஞ்சின் மற்றும் சேசிஸ் எண்ணை மாற்றுவதன் மூலம் மேற்படி பாலிசி எண் கொண்ட வாகனத்தை சரக்கு வாகம் என போலியாக பாலிசி உருவாக்கியுள்ளார். 1ம் பிரதிவாதி வாகனத்தை Alto என தவறாக சித்தரித்து ரூ.2,693/- குறைவான பிரீமியத்தை செலுத்தி பாலிசியைப் பெற்றுள்ளார். மேலும், லாரிக்கு உண்மையான பிரீமிய தொகை ரூ.30,610/- ஐ போலியாக பாலிசியை உருவாக்கி ஆர்.டி.ஓ மற்றும் காவல்துறை அதிகாரிகள் முன் ஆஜர்படுத்தியுள்ளார். எனவே, 2வது எதிர்மனுதாரர் கம்பெனி இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என கூறியுள்ளார். மேற்படி விபத்தானது மனுதாரர் பயணம் செய்த TATA ACE வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி எதிரே 1ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான TN 45 CY 5983 என்ற எண் கொண்ட அசோக் லைலாண்ட் லாரி மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், மேற்படி விபத்திற்கு மனுதாரர் பயணம் செய்த டாடா ஏஸ் வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவுதான் காரணம். எனவே மனுவிலும், முதல் தகவல் அறிக்கையில் கூறியுள்ளவாறு 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் மேற்படி விபத்திற்கு எந்தவிதத்தில் பொறுப்பாகமாட்டார். மேலும், விபத்தில் இறந்தவரின் வயது, வருமானம், தொழில் ஆகியவை குறித்து மனுவில் கூறப்பட்டுள்ளவைகளை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். மேலும், மனுவில்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:06:27 +0530

கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை அதிகமானதாகும். மேற்படி காரணங்களுக்காக மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4)** 1ம் எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜரில்லததால் அவர் ஒருதரப்பாக கருதப்பட்டுள்ளார்.

**5)** இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனைகள் பின்வருமாறு:

1) விபத்து யாருடைய தவறுகையின் காரணமாக ஏற்பட்டுள்ளது?

2)மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் யார்?

3)மனுதாரருக்கு கிடைக்கத்தக்க பரிகாரங்கள் யாவை?

**6)** இம்மனுவில் மனுதாரர் தரப்பில் ம.சா.1 விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.16 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.1, எ.ம.சா.2 மற்றும் எ.ம.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7)** **<u>பிரச்சனை எண் 1 க்கான தீர்வு</u>:**

கடந்த 24.01.2024 அன்று ஏற்பட்ட சாலை விபத்தின் காரணமாக இறந்துபோன நம்புராஜன் என்பவரின் மகளான மனுதாரருக்கு நஷ்ட ஈடாக ரூ.30,00,000/-வழங்கக்கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**8)** மனுதாரர் இறந்துபோனவரின் மகள். இறந்துபோனவரின் மகளான மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துகொண்டு ம.சா.ஆ.1 முதல் 16 வரையான ஆவணங்கள் குறியீடு செய்துள்ளார். ம.சா.1 தனது சாட்சியத்தில்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:06:30 +0530

தனது தந்தை 15.01.2024ம் தேதியன்று பாதையைாத்திரையாக பழனி முருகன் கோவிலுக்கு சென்றுவிட்டு 23.01.2024ம் தேதி TN 65 BZ 3188 என்ற எண் கொண்ட TATA ACE வாகனத்தில் இரவு சுமார் 8.30 மணிக்கு பழனியில் இருந்து புறப்பட்டு 24.01.2024ம் தேதி அதிகாலை சுமார் 2 மணியளவில் தேவகோட்டை தாண்டி வந்து கொண்டிருந்தபொழுது தச்சுவயல் நாடார் குடியிருப்பு செல்லும் சாலை அருகே வந்து கொண்டிருந்தபொழுது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி எதிரே 1ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான TN 45 CY 5983 என்ற எண் கொண்ட அசோக் லைலாண்ட் லாரி வாகனத்தை ஓட்டிவந்த அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் சாலைவிதிகளை கடைபிடிக்காமலும், ஹாரன் அடிக்காமலும் மேற்படி வாகனத்தை ஓட்டி வந்து தனது தந்தை சென்ற வாகனத்தின் முன்பக்கம் மோதி அவருக்கு தலையில் காயமும், வலது கால் முட்டிக்கு கீழ் பலத்த ரத்தக்காயமும், உடல்முழுவதும் சிராய்ப்பு காயங்களும் ஏற்பட்டதாகவும், மேலும் மேற்படி வாகனத்தில் சென்ற நபர்களுக்கு பலத்த காயமும் ஏற்பட்டதால் மேற்படி சம்பவத்தை பார்த்த அந்த வழியாக சென்ற நபர்கள் சுயநினைவற்ற நிலையில் இருந்த மனுதாரரின் தந்தையை ஆம்புலன்ஸ் மூலம் தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தபொழுது அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் காயங்களினால் தனது தந்தை நம்புராஜன் இறந்துவிட்டார் என்று மனு சங்கதிகளை ஒத்துரைத்து சாட்சியமளித்துள்ளார். மேலும், ம.சா.1 ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் வகையில் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை அமைந்துள்ளது.

**9)** இந்த மனுவில், 1ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு இந்நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாமையால் தோன்றாத்தரப்பினராக

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:06:34 +0530

இருந்து வருகிறார்.

**10)** இம்மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் இறந்துபோன நம்புராஜன் பயணம் செய்த வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி எதிரே 1ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான அசோக் லைலாண்ட் லாரி மீது மோதி விபத்து ஏற்பட்டதால் மனுதாரர் இறந்துவிட்டதாகவும், மேற்படி விபத்திற்கு மனுதாரர் பயணம் செய்த டாடா ஏஸ் வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவுதான் காரணம் என்று வாதிட்டுள்ளார். இவரது கூற்றினை நிரூபிக்க 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.1 முதல் எ.மா.சா.3 ஆகியோர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளனர். 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் சம்பவ தினத்தன்று விபத்து நடக்கவில்லையொன்றோ, விபத்தில் 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் ஈடுபட்டுள்ளது என்பதும், விபத்தில் நம்புராஜன் என்பவர் இறந்துபோயுள்ளார் என்பது குறித்து மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை.

**11)** மேலும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் விபத்தானது இறந்துபோன நம்புராஜன் பயணம் செய்த வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவினால் ஏற்பட்டுள்ளதென்று வாதிட்டுள்ள நிலையில், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ம.சா.1 சாட்சிய சங்கதிகளை மறுத்து சம்பவத்தை கண்ணுற்ற வேறு சாட்சிகள் யாரையும் விசாரித்து தனது கூற்றை நிரூபிக்கவில்லை. இந்நிலையில் ம.சா.1 சாட்சியத்தை குறுக்கு விசாரணை செய்தபோதும் தெள்ளத்தெளிவாக 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவே விபத்திற்கு காரணம் என்று உறுதி செய்துள்ளனர். எனவே ம.சா.1 சாட்சியம் மற்றும் ம.சா.ஆ.1 முதல் தகவல்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:06:37 +0530

அறிக்கையின் அடிப்படையில் இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின் கவனக்குறைவும் அஜாக்கிரதையுமே காரணம் என்று இந்த பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**12)** <u>பிரச்சனை எண்.2 க்கான தீர்வு:</u>

**12.1** விபத்து 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவினால் ஏற்பட்டுள்ளது என பிரச்சனை எண்.1க்கு இந்நீதிமன்றத்தில் தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் 2ம் எதிர்மனுதாரரின் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது காப்பீடு பாலிசி ம.சா.ஆ.5–லிருந்து தெரியவருகிறது. காப்பீடு பாலிசி ம.சா.ஆ.5 லிருந்து காப்பீடானது 23.01.2024 முதல் 22.01.2025 வரை அமலில் உள்ள விபரம் தெரியவருகிறது. விபத்தானது 24.01.2024 தேதியில் நடந்துள்ளது. எனவே, விபத்து சமயத்தில் காப்பீடு அமலில் உள்ள விபரம் தெரியவருகிறது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தங்களது காப்பீட்டு நிறுவனத்தின் சட்ட அலுவலர் ஸ்ரீனிவாசன் என்பவரை எ.ம.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு அவர் மூலம்
1ம் எதிர்மனுதாரரின் வாகனம் தனிநபர் கார் என்று வழங்கப்பட்ட பாலிசியை 1ம் எதிர்மனுதாரரின் லாரிக்கு வழங்கப்பட்ட பாலிசி போன்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும் ஆனால் அது தனிநபர் வாகனம் என்று எடுக்கப்பட்ட காப்பீடு சான்றிதழ் எ.ம.சா.ஆ.2 மற்றும் போலி காப்பீடு சான்றிதழ் எ.ம.சா.ஆ.3 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எ.ம.சா.1 சாட்சியத்தில் தங்களது நிறுவனத்தில் 22.01.2024ம் தேதி முதல் 24.01.2024ம் தேதி வரை காப்பீட்டு சான்றிதழ்களின் விவரப்பட்டியல் (65B சான்றிதழ்) எ.ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தை சாலையில் இயக்குவதற்கு மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்துவதற்கு போலியாக காப்பீடு பெற்றுதற்காக 1ம் எதிர்மனுதாரர் மீது பதிவு

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:06:41 +0530

செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை எ.ம.சா.ஆ.5 ஆகவும், மோட்டார் வாகன காப்பீடு பாலிசி தொடர்பான வாகனங்களுக்கான produce code விவரங்கள் எ.ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த வழக்கின் கோரிக்கையாளரான மனுதாரர் தனது தந்தை பயணம் செய்த வாகனத்தின் மீது 1ம்எதிர்மனுதாரர் தனக்குச் சொந்தமான TN 45 CY 5983 என்ற எண் கொண்ட வாகனத்தை ஓட்டிச்சென்ற அதன் ஓட்டுநரின் கவனக் குறைவினால்தான் மனுதாரரின் தந்தைக்கு விபத்து ஏற்பட்டுள்ளது என்று நிரூபித்துள்ளார்.

**12.2** இந்நிலையில், 1ம் எதிர்மனுதாரர் மேற்படி வாகனத்தின் காப்பீடு என்பதாக கூறி தவறாக காப்பீட்டு பிரிமீயம் குறைவான தொகை செலுத்தி பொய்யாக பாலிசி ஏற்படுத்திக்கொள்ளார் என்றும் அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக எ.ம.சா.ஆ.5 ன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும் பாலிசிகளுக்கான product code விவரத்தின்படி 1ம் எதிர்மனுதாரர் பெற்றுள்ள பாலிசியானது காருக்கான பாலிசி என்றும் லாரிக்கானது அல்ல என்றும், எனவே 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் காப்பீடு போலியானது என்பதால் இழப்பீடு வழங்க முடியாது என்றும் வாதிடப்பட்டது. ஆனால், விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் என்ஜின் எண் மற்றும் சேசிஸ் எண் ஆகியவை 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வழங்கப்பட்டதாக தாக்கல் செய்யப்பட்டுள்ள காப்பீட்டு பாலிசியான எ.ம.சா.ஆ.2 உடன் ஒத்துப்போகிறது. தவிரவும் மேற்படி வாகனத்தின் சேசிஸ் எண் மற்றும் என்ஜின் எண் மனுதாரர் தரப்பு சான்றாவணம் 6 ஆர்.சி.புக் மற்றும் 7 காப்பீட்டு சான்றிதழ் ஆகியவற்றிலும் குறிப்பிட்டுள்ள எண்களுடன் ஒத்துப்போகின்றன. எனவே, பாலிசி எண்ணில் குறிப்பிட்டுள்ள சேசிஸ் எண் மற்றும் இன்ஜின் எண்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:06:45 +0530

ஆகியவை லாரியின் எண்களாக உள்ளன என்பதை கருத்தில் கொள்ளவேண்டியுள்ளது. அத்துடன் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியான எ.ம.சா.1 தனது குறுக்கு விசாரணையில் 3ம் தரப்பு காப்பீடு செய்யப்படும்போது மட்டும் வாகனத்தை ஆய்வு செய்வதில்லை என்றும் ஆனால் Comprehensive காப்பீடு செய்யப்படும்போது வாகனத்தை ஆய்வு செய்வோம் என்றும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடானது Comprehensive Policy என்பது தெரியவருகிறது.

**12.3** இந்நிலையில், 1ம் எதிர்மனுதாரர் தவறான விவரம் சொல்லி காப்பீடு பெற்றிருப்பது அவருக்கும், 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கும் இடையேயுள்ள தனிப்பட்ட பிரச்சனை என்றே கருதவேண்டியுள்ளது. மேற்படி என்ஜின் எண் மற்றும் சேசிஸ் எண்ணின் அடிப்படையில் முறையாக வாகனத்தை ஆய்வு செய்து காப்பீடு வழங்கி இருக்கவேண்டும் என்பது 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் கடமையாகும். ஆனால், அவ்வாறு தன் கடமையிலிருந்து தவறி வாகனத்தினை பார்க்காமலேயே காப்பீடு செய்யப்பட்டதாக கூறும் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் மேற்படி சேசிஸ் எண் மற்றும் இன்ஜின் எண் ஆகியவற்றின் அடிப்படையில் விபத்து ஏற்படுத்திய லாரிக்கு காப்பீடு வழங்கியதாகதான் இந்த நீதிமன்றம் கருதவேண்டியுள்ளது. மேற்படி 1ம் எதிர்மனுதாரர் தன்னை ஏமாற்றுவதாக 2ம் எதிர்மனுதாரர் எண்ணுகையில் அவைகளை பொறுத்து தன்னிப்பட்ட முறையில் 1ம் எதிர்மனுதாரர் மீது குற்றவியல் நடவடிக்கை மற்றும் வேறு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அதனடிப்படையில் விபத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இழப்பீடு வழங்க முடியாது என்று 2ம் எதிர்மனுதாரர் சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும், மேற்படி விபத்தின்போது காப்பீடு ஊர்ஜிதத்தில் உள்ளது

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:06:49 +0530

என்பதும், இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் 1ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைபட்டுள்ளது என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. ஆகையால், இந்த வழக்கில் தீங்கிளைத்தவர் 1மஎதிர்மனுதாரர் என்பதால் இறந்துபோன நம்புராஜன் என்பவருக்கு இழப்பீடு வழங்குவதற்கு எவ்வித சட்டப்படியான தடை ஏதும் இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

மேலும், மனுதாரர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட ***"National Insurance Company Limited Vs. Challa Bharathamma and others (2004) 8 SCC 517"*** wherein held that

> ***" the claim of the Insurance Company should be secured by the owner. We have no quarrel with such proposition. What we want to say is that unless and until an appropriate application in the selfsame proceeding is made by the Insurance Company for the purpose of recovery, the question of furnishing security by the owner cannot arise, we are only concerned with the payment of compensation to the claimants which cannot be stalled and has got nothing to do with the dispute regarding liablity between the owner and the insurance company".***

என்ற தீர்ப்பின்படி காப்பீட்டு ஒப்பந்தம் என்பது வாகன உரிமையாளருக்கும், காப்பீட்டு நிறுவனத்திற்கும் இடையில் உள்ள ஒப்பந்தம் ஆகும். இந்த ஒப்பந்த விதி மீறலுக்காக விபத்தில் காயமடைந்த நபருக்கு அநீதி ஏற்படக்கூடாது என்றே மேற்படி தீர்ப்புகளில் கூறப்பட்டுள்ளது.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:06:53 +0530

**13)** ஆகையால், மேற்படி தீர்ப்பின்படி இவ்வழக்கில் விபத்தில் இறந்துபோன மனுதாரர் தந்தை பயணம் செய்த வாகனத்தின் ஓட்டுநர் 3ம் தரப்பினர்(Third party) ஆக சேர்க்கப்பட்டுள்ளார். மேற்படி 3ம் எதிர்மனுதாரர் வாகனம் 4ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் காப்பீட்டு நிறுவனத்தின் சட்ட அலுவலர் வித்யாதரன் என்பவரை எ.ம.சா.3 ஆக விசாரித்துக்கொண்டு அவர் மூலம் தங்களது நிறுவனத்தால் TN 65 BZ 3188 என்ற டாடா ஏஸ் வாகனத்திற்கு வழங்கப்பட்ட காப்பீடு பாலிசி எ.ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். இந்நிலையில், மேற்படி விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவினால் ஏற்பட்டுள்ள நிலையில், 1ம் எதிர்மனுதாரர் அவரது வாகனத்தால் ஏற்பட்ட இறப்பிற்கான இழப்பீட்டினை மனுதாரருக்கு கொடுக்க கடமைப்பட்டவர் என்றும் 1ம் எதிர்மனுதாரர் மேற்படி வாகனத்தின் உரிமையாளர் என்ற முறையில் 1ம் எதிர்மனுதாரரே பொறுப்பேற்க வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இந்நிலையில் 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் 2ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு அது விபத்து காலத்தில் ஊர்ஜிதத்தில் உள்ளது. விபத்தினால் இறந்துபோனது 3ம் நபர் என்ற நிலையில் அவருக்கும் இந்த காப்பீட்டு விதிமீறலுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாத நிலையில், 3ம் நபர் பாதிப்படையக் கூடாது என்ற நெறிமுறைப்படியும், இந்த விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட இழப்பீட்டினை 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்திவிட்டு பின்னிட்டு Pay and Recover Principle–ன் படி 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக்கொள்ள வேண்டும் என்று இந்நீதிமன்றம் இப்பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:07:00 +0530

14) <u>பிரச்சனை எண்.3 க்கான தீர்வு</u>

விபத்து காலத்தில் இறந்துபோன நம்புராஜனின் வயது 59 என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் இறந்துபோன நம்புராஜனின் வயது என்ன என்பது பற்றி காண்கையில், மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.2 பிரேத பரிசோதனை அறிக்கை குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் இறந்துபோன நம்புராஜனின் வயது 57 என குறிப்பிட்டுள்ளதைக் காணமுடிகிறது, இந்நிலையில் ம.சா.ஆ.11 அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மீனவர் அடையாள அட்டை அடிப்படையில் விபத்து சமயத்தில் இறந்துபோன நம்புராஜனின் வயது 68 என இத்தீர்ப்பாயம் நிர்ணயம் செய்கிறது.

15) மேலும் விபத்தின் போது இறந்துபோன நம்புராஜன் என்பவரின் வயது 68 என்றும், அவர் மீனவர் வேலை செய்து மாதம் ரூ.30,000/- வரை வருமானம் ஈட்டிவந்தார் என மனுவிலும், ம.சா.1 சாட்சியத்திலும் தெரிவித்துள்ளார். எனினும், இறந்துபோனவரின் வயது, தொழில் மற்றும் வருமானம் ஆகியவற்றை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. ம.சா.ஆ.11 மீனவர் அடையாள அட்டையில் இருந்து இறந்துபோனவருடைய பிறந்த தேதி 01.07.1956 என்பது தெரியவருகிறது. விபத்து 21.01.2024 ம் தேதியில் நடந்துள்ளது. எனவே, ம.சா.ஆ.11 ன் படி விபத்து சமயத்தில் இறந்துபோனவரின் வயது 68 என நிர்ணயம் செய்வது பாதுகாப்பாக அமையும். எனவே, ம.சா.ஆ 11 ன் படி இறந்துபோனவரின் வயது 68 என நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரர் இறந்துபோனவரின் மகள் என்பது ம.சா.ஆ.4 வாரிசு சான்றிதழில் இருந்து தெரியவருகிறது. எனினும் இறந்துபோனவரின் தொழில் மற்றும் வருமானம் ஆகியவற்றை நிலை நாட்டுவதற்கு வேறு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இந்நிலையில், இறந்துபோனவரின் வயது

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:07:04 +0530

மற்றும் விபத்து நடைபெற்ற வருடம் 2024 என்பதையும் கருத்தில்கொண்டு இறந்துபோன நம்புராஜனின் மாத வருமானம் ரூ.15,000/-என எடுத்துக் கொள்ளலாம் என இந்நீதிமன்றம் நிர்ணயம் செய்கிறது.

**16)** மேலும் வாகன விபத்தில் இறந்துபோன நம்புராஜனின் மாத வருமானம் ரூ.15,000/- என நிர்ணயித்துள்ளதை கருத்தில் கொண்டும், ***2009(2) TNMAC -பக்கம் 1(SC)- Smt.Sarla Verma and others -Vs- Delhi Transport Corporation and Others***-என்ற வழக்கில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பின் அடிப்படையில் விபத்து காலத்தில் இறந்த நபரின் வயது 68 என்பதையும் அவர் திருமணம் ஆனவர் என்பதையும் அவர் குடும்பத்தில் 3 நபர்கள் அவரைச் சார்ந்து இருந்தார்கள். மேற்படி விபத்தில் மனுதாரரின் தாயார் இறந்துவிட்டார். எனவே அவருடைய வருமானத்தில் 50 % பங்கு அவருடைய சொந்த செலவிற்கு கழிக்கப்பட வேண்டும் என்று கருதி அதனடிப்படையில் ரூ.15,000-ரூ.7,500 = ரூ.7,500/-ஐ இறந்துபோன நம்புராஜன் தன்னுடைய குடும்பத்திற்கு கொடுத்திருப்பார் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. சரளவர்மா வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் இறந்துபோன நம்புராஜனின் வயது 68 என்பதை கருத்தில்கொண்டு 5 பெருக்கல் குறியீட்டை இந்த தீர்ப்பாயம் கணக்கில்கொண்டு, வருமான நஷ்ட ஈட்டை நிர்ணயம் செய்கிறது. அந்த அடிப்படையில் ரூ.7,500X12X5= ரூ.4,50,000/- வருமான இழப்பீடாக மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது. மனுதாரர் அவரது தனது தந்தையின் அன்பு மற்றும் அரவணைப்பிற்காக ரூ.20,000/-மும், ஈமக்கிரியை செலவிற்கு ரூ.15,000/-மும், உடமைகள் இழப்பிற்காக ரூ.10,000/-மும் போக்குவரத்து செலவிற்காக ரூ.15,000/-மும் கொடுக்கப்படுகிறது. எனவே மனுதாரர்களுக்கு மொத்தம் ரூ.5,10,000/- இழப்பீடாக கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:07:07 +0530

தீர்மானிக்கிறது. எனவே, 2ம் எதிர்மனுதாரர் ரூ.5,10,000 /- இழப்பீட்டுத் தொகையை வட்டியுடன் மனுதாரருக்கு செலுத்திவிட்டு 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக்கொள்ள வேண்டும் என்று முடிவு காணப்படுகிறது. எனவே, மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டுத் தொகை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**17)** கீழ்கண்ட விவரங்களின் அடிப்படையில் மனுதாரருக்கு நஷ்ட ஈடு கிடைக்கத்தக்கது .

| வரிசை எண் | விவரங்கள் | தொகை |
|---|---|---|
| 1. | வருமான இழப்பு | ரூ. 4,50,000/- |
| 2. | அன்பு மற்றும் அரவணைப்பிற்காக | ரூ. 20,000/- |
| 3. | ஈமக்கிரியை செலவிற்காக | ரூ. 15,000/- |
| 4. | உடமைகள் இழப்பிற்காக | ரூ. 10,000/- |
| 5. | போக்குவரத்து செலவிற்காக | ரூ. 15,000/- |
| | மொத்தம் | ரூ. 5,10,000/- |

**முடிவாக,**

1) இம்மனு செலவுத்தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்பட்டு,

2) 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு நஷ்ட ஈடாக ரூ. 5,10,000/-ஐ மனு தாக்கல் செய்த 02.04.2024 தேதியிலிருந்து தொகை முழுவதும் செலுத்தப்படும் தேதிவரை வரை 7.5 சதவீத வட்டி மற்றும் செலவு தொகை **ரூ.24,183/வுடன்** ஒரு மாத காலத்திற்குள் **Virtual Account Number of this Court in the State Bank of India, Bharathi Nagar Branch, Ramanathapuram (IFSC Code**

MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.03.16 18:07:12 +0530

**No.SBIN0004266 in to the Virtual Account No.MACT91MCOP822024)** வைப்பீடு செய்ய வேண்டுமென்றும், **(Excluding the period of dismissal for default, if any);** பின்னிட்டு 2ம் எதிர்மனுதாரர் Pay and Recover Principle படி 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

3) 2ம் எதிர்மனுதாரர் மேற்படி தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்த பின்னர் மனுதாரர் அவரது பங்குத்தொகையில் 50 சதவீதம் விகிதாச்சார வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், மீதமுள்ள தொகையை ஏதாவது ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கி இராமநாதபுரம் கிளையில் 3 ஆண்டுகளுக்கு மனுதாரரின் பெயரில் வைப்பீடு செய்யவேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

4) வழக்கறிஞர் கட்டணம் ரூ. 19,700/-

5) பாக்கி நீதிமன்ற கட்டணம் ரூ.4,100/-ஐ 15 நாட்களுக்குள் மனுதாரர் செலுத்தவேண்டும் என்றும், அவ்வாறு செலுத்தத் தவறும் பட்சத்தில் செலுத்த தவறிய காலத்திற்கு உரிய வட்டியை இழப்பதோடு செலுத்தும்வரை இவ்வுத்தரவு நிறைவேற்றுவதற்குரியது அல்ல என்றும் உத்தரவிடப்படுகிறது.

6) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன் தீர்ப்பு வழக்கு எண். Tr.CMP.Nos.264 to 281 of 2021 M/s Cholamandalam Ms.General Insurance Company Ltd /Vs/ Mr.Ayyanar and others என்ற முன் தீர்ப்பில் பிறப்பித்த உத்தரவுப்படி நிறைவேற்றாணையின் விஷயங்கள் அனைத்தும் இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டுவிட்டது. தனியாக நிறைவேற்றாணை பிறப்பிக்கூடாது.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:07:16 +0530

## <u>செலவுத் தொகை  விபரம்</u>

மனுதாரர் தரப்பு

| | | |
|---|---|---|
| வக்காலத்து | – | 10.00 |
| நீதிமன்ற கட்டணம் | – | 4,473.00 |
| வழக்கறிஞர் கட்டணம் | – | 19,700.00 |
| Total | – | 24,183.00 |

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 16–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:07:22 +0530

மோட்டார் வாகன விபத்துக்
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை மாவட்ட நீதிபதி
இராமநாதபுரம்.

<u>மனுதாரர்கள் தரப்பு  சாட்சிகள்</u>

ம.சா.1 .. திருமதி. சிவரஞ்சனி

<u>மனுதாரர்கள்  தரப்பு ஆவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 24.01.2024 | முதல் தகவல் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ.2 | -- | மனுதாரர் தகப்பாரின் பிரேத பரிசோதனை அறிக்கை நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.3 | 08.02.2024 | மனுதாரர் தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ.4 | 18.02.2024 | மனுதாரர் தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் |
| ம.சா.ஆ.5 | 22.01.2024 | 1ம் எதிர்மனுதாரரின் வானம் TN 45 CY 5983 க்கான காப்பீடு சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ.6 | -- | மேற்படி வாகனத்தின் ஆர்.சி. அட்டை நகல் |
| ம.சா.ஆ.7 | -- | 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ.8 | 01.09.2023 | 3ம் எதிர்மனுதாரர் வாகனம் TN 65 BZ 3188 TATA ACE க்கான காப்பீட்டு சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ.9 | -- | 3ம் எதிர்மனுதாரர் வாகனமான TN 65 BZ 3188 ற்கான ஆர்.சி அட்டை நகல் |
| ம.சா.ஆ.10 | -- | 3ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ.11 | -- | மனுதாரர் தந்தையின் மீனவர் அடையாள அட்டை நகல் |
| ம.சா.ஆ.12 | -- | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் |
| ம.சா.ஆ.13 | -- | மனுதாரர் தாயாரின் பிரேத பரிசோதனை அறிக்கை நகல் |
| ம.சா.ஆ.14 | 08.02.2024 | மனுதாரர் தாயாரின் இறப்பு சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ.15 | 28.02.2024 | மனுதாரர் தாயாரின் வாரிசு சான்றிதழ் |
| ம.சா.ஆ.16 | | மனுதாரர் தாயாரின் மீனவர் அடையாள அட்டை நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.1 | .. | ஸ்ரீனிவாசன் |
| எ.ம.சா.2 | .. | சாலிகா |
| எ.ம.சா.3 | .. | வித்யாதரன் |

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:07:25 +0530

**எதிர்மனுதாரர் தரப்பு ஆவணம்**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | – | வாஹன் வலைதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட TN 45 CY 5983 வாகனத்திற்கான பதிவு விவரங்கள் வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்த நகல் |
| எ.ம.சா.ஆ.2 | – | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தில் தனிநபர் வாகனம் என்று எடுக்கப்பட் காப்பீடு சான்றிதழ் உண்மை நகல் |
| எ.ம.சா.ஆ.3 | – | விபத்து சம்பந்தமாக 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு வழங்கப்பட்டதாக தாக்கல் செய்யப்பட்ட போலி காப்பீடு சான்றிதழ் (ம.சா.ஆ.5) ஜெராக்ஸ் நகல் (போலிசாரால் வழங்கப்பட்டது) |
| எ.ம.சா.ஆ.4 | – | 1ம் எதிர்மனுதாரர் மீது எங்கள் நிறுவனத்தில் போலி காப்பீடு சான்றிதழ் தொடர்பாக தேவகோட்டை காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் நகல் (அஞ்சல் ரசீது மற்றும் போஸ்டல் டிராக் கன்சைன்மென் விவரங்களுடன் ஜெராக்ஸ் நகல் |
| எ.ம.சா.ஆ.5 | 15.10.2025 | மேற்படி புகாரின் அடிப்படையில் 1ம் எதிர்மனுதாரர் மீது பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.319/25 ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்த நகல் |
| எ.ம.சா.ஆ.6 | – | 22.01.2024 முதல் 24.01.2024 வரை எங்கள் நிறுவனத்தால் வழங்கிய காப்பீடு சான்றிதழ்களின் விவரப்பட்டியல் (65பி) சான்றிதழ் உடன்) உண்மை நகல் |
| எ.ம.சா.ஆ.7 | – | எங்கள் நிறுவனத்தில் வழங்கப்படும் மோட்டார் வாகன காப்பீடு பாலிசி தொடர்பான |

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:07:30 +0530

| | | |
|---|---|---|
| | | வாகனங்களுக்கான product code விவரங்கள் அசல் |
| எ.ம.சா.ஆ.8 | – | எம்.சி.ஓ.பி.1045/2024 வழக்கில் மதுரை சிறப்பு மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்புரை வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்த நகல் |
| எ.ம.சா.ஆ.9 | 01.09.2023 | TN 65 BZ 3188 என்ற டாடா ஏஸ் வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட காப்பீடு பாலிசி ஜெராக்ஸ் நகல் |

**சாட்சிய சான்றாவணங்கள்: இல்லை**

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 18:07:34 +0530

மோ.வா.வி.கோ.தீ.நீ.
முதன்மை மாவட்ட நீதிபதி
இராமநாதபுரம்.